වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report 2024

GJRTI

මැණික් හා ස්වර්ණාභරණ පර්යේෂණ හා අභ්‍යාස ආයතනය

மாணிக்கம் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவனம்

Gem and Jewellery Research and Training Institute

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி
மற்றும்
பயிற்சி நிறுவனம்

வருடாந்த அறிக்கை

2024

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
"ருவன் செவன"
இல : 73/5/ஏ,
வெலிவிட்ட
2025.02.27

கௌரவ அமைச்சர்
கைத்தொழில் அமைச்சு
தபால் பெட்டு எண் 570,
73/1
காலி வீதி,
கொழும்பு - 03

கௌவர அமைச்சரவர்கட்கு,

<u>வருடாந்த அறிக்கை 2024</u>

1971 இன் இலக்கம் (2) 14 38 உப பிரிவின் பிரகாரம், கீழுள்ள ஆவணங்களை தங்களுக்கு முன் வைக்கின்றேன்.

1. 2024 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பான இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிர்வாக அறிக்கைகள்
2. 2024 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான செயலாற்றுகை அறிக்கை

இவ்வண்ணம் உண்மையுள்ள,

திரு ஜீ. டப்ளியூ. ஏ. ரொஹான் பிரனாந்து
தலைவர்
இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

தூர நோக்கு, செயற்பணி

மற்றும்

நோக்கங்கள்

தூர நோக்கு

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் வளர்ச்சிக்கும், மேம்படுத்துகைக்குமென தொடர்புடைய ஆராய்ச்சிகளையும், பயிற்றுவிப்புகளையும் முன்னெடுத்த வண்ணம் மிகச் திறந்த ஆராய்ச்சிகளையும், பயிற்சிகளையும் முன்னெடுக்கின்ற நிலையமாகக் செயற்படுதல்.

செயற்பணி

“இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் போட்டித் தன்மையுடைய திறனை மேம்படுத்துவதன் மூலம் எமது சேவை பெறுநர்களுக்கு அதி கூடிய சேவையை வழங்கும் பொருட்டு தொடர்புடைய புதிய இரத்தினக் கல் படிமங்களை அடையாளும் காணும் பொருட்டு ஆராய்ச்சி செயன் முறைகள், இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் தொழிலின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய புதிய நிர்மாணிப்புகளை உறுவாக்கி அவற்றினது பெறுமதியை அதிகரிக்கும் செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பத் திறனின் ஊடாக வலுவூட்டு திறன் மிக்க ஊழியர்களை உறுவாக்கி, தொழிலுடன் தொடர்புடைய செயலமர்வுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி மடல்களை வெளியிடுதல் எமது குறிக்கோளாகும்."

நோக்கங்கள்

"இலங்கையிலுள்ள இரத்தினக் கல் கனிய வள மூலாதாரங்களை ஆராய்ந்து பேண்தகு வகையில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றூம் புதிய தொழில்நுட்ப செயன் முறைகள் தொடர்பாக பயிற்சி பெற்ற ஊழியர்களின் வாயிலாக தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பை வழங்குதல்"

2.1. பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம்

2024 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1	திரு ஜீ. டப்ளியூ. ஏ. ரொஹான் பிரனாந்து	தலைவர் இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்	பணிப்பாளர் சபையின் தலைவர் 2024.12.27 இலிருந்து
2	திரு கே. என். பீ. ஜயரத்ன	பணிப்பாளர் (பதில் கடமையாற்றும்) தேசிய திட்டமிடல் திணைக்களம் நிதி அமைச்சு	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2022.04.01 இலிருந்து 2024.09.20 வரை
3	திரு எஸ். ஜீ. எல். பிரனாந்து	-	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2022.12.08 இலிருந்து 2024.09.20 வரை
4	திரு ஜனக உதயகுமார	பணிப்பாளர் நாயகம் தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2023.12.28 இலிருந்து 2024.09.20 வரை
5	கலாநிதி எஸ். பெரேரா	தலைவர் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்	பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் 2023.12.15 இலிருந்து 2024.02.26 வரை
6	திரு எஸ். ஏ. டப்ளியூ. கே. ஜயசேகர	பணிப்பாளர் (திட்டமிடல்) பதில் கடமையாற்றும் கைத்தொழில் அமைச்சு	பணிப்பாளர் சபையின் அவதானிப்பாளர் 2022.01.31 இலிருந்து 2024.09.20 வரை

உயர் முகாமைத்துவம்

பேராசிரியர் G.W.A. றொகான் பெர்னாண்டோ
தலைவர்
BSc (Hons), MPhil (Perad);
PhD (Mainz, Germany);
CGeol. (IGSL)

திரு. B.G.R.W ஹம்லாத்
பொது இயக்குனர்
இயக்குனர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி
B.Sc.(Phy-Sp),
M.Sc. in Gemmology (SL),
MGA(SL), FGA, MBA(Reading)

திரு R.M.N.G.K.ஜயசிங்க
இயக்குனர் ஆராய்ச்சி
B.Sc.(Geology), M.Sc.(GIS & RS),
M.Phil.(Reading)
MGS(SL), MGA(SL), MGIS(SL)

திரு S.L.J. முகாந்திரம்
உதவி இயக்குனர்(நிதி)
MPAcc(USJP),
B.com(Sp) Accountancy
(Hons) (USJP),CBA(ICASL),
Adv.Cer(Procurement)ICTAD)

திருமதி M.A.நதீகா சாமினி மந்திரிரத்ன
உதவி இயக்குனர் நிர்வாகம் மற்றும் மனித வளம்
B.Tec.(Sp) Material Science ,
M.Sc (Nano Science Technology Reading)

3. கலந்தாலோசிப்பு ஆண்டு காலப் பகுதியிலிருந்த படியான வாய்ப்புகள் மற்றும் சவால்கள் தொடர்பான தலைவரது மதிப்பீடு

3.1 சந்தர்ப்பங்கள்

❖ **ஆராய்ச்சி மற்றும் பயிற்சி தொடர்பான கோரிக்கை**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளின் அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு தொடர்பாக பாராளுமன்றத்தின் சட்டத்தின் கீழ் நிலை நாட்டப்பட்ட இந் நிறுவனம், தற்சமயம் இரச்சினக் கல் சுரங்க அகழ்வுச் செயற்பாட்டிலிருந்து, சர்வதேச சந்தை வரையான தங்காபரண உற்பத்தி வரையான பெறுமதி அதிகரிப்பு செயற்பாடு உள்ளடங்கக் கூடிய வகையாக புதிய உற்பத்திகளுக்குத் தேவையான திறன்கள் மற்றும் அறிவை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. நிறுவனத்தினால் இன்றளவில் கிட்டத்தட்ட 21 பயிற்சிப் பாட நெறிகள், டிப்ளோமா மட்டம் வரையும் பல்வேறு துறைகள் உள்ளடங்கக் கூடிய வகையாக 15 நிலையங்களின் ஊடாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிறுவனம் நிலை நாட்டப்பட்டு மூன்று தசாப்த காலப் பகுதியில் இந் நிறுவனத்துக்குச் சவாலாக அமையக் கூடிய ரீதியான மாற்று அரச அல்லது தனியார்ப் பயிற்சி நிறுவனங்கள் தோற்றம் பெறாதிருப்பதுடன், நிறுவனத்துக்குச் சவாலாக அமையக் கூடிய வகையான பயிற்சி நிறுவனங்கள் தோற்றம் பெறக் கூடிய திறனும் சந்தையினுள் காணப்படுவதில்லையென அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மேலும் இந் நாட்டினதும், சர்வதேச இரத்தினக் கல் சந்தையினுள்ளும் ஏனைய நாடுகளுடன் போட்டியிடக் கூடிய அறிவுத் திறனை வியாபிக்கச் செய்யக் கூடிய நிபுணத்துவம் நிறுவனம் வசம் காணப்படுவதனை அடையாளம் காணலாம்.

❖ **தொழில்நுட்ப வசதிகள்**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை தொடர்பாக உயர் தொழில்நுட்பத் திறன் கொண்ட பயிற்சி பெற்ற தொழில் முனைவர்களை உறுவாக்கும் பொருட்டும், சுற்றாடல் நேயமிக்க இரத்தினக் கல் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கும் பொருட்டும் இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையுடன் தொடர்புடைய புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தக் கூடிய திறன் கொண்ட பரந்துபட்ட உபகரணங்கள் மற்றும் கணினி மென்பொருட்கள் நிறுவனம் வசம் காணப்படுகின்றது. அவ்வாறே, இவ் இயந்திரோபகரணங்களை இயங்கச் செய்யக் கூடிய திறனும், அறிவுத் திறனுமுள்ள பரந்து பட்ட பயிற்சி பெற்ற மானிட வளங்களும் நிறுவனம் வசம் காணப்படுகின்றது. சர்வதேசத் தராதர நிலைகளையுடைய பயிற்சிப் பாட நெறிகள் தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய பரந்து பட்ட வசதிகளை உள்ளடக்கிய இரத்தினக் கல்லியல், இரத்தினக் கல் வெட்டுகைப் பயிற்சி அலகுகள், கணினி சார்ந்த தங்காபரண அலங்கார நகை உறுவமைப்புப் பயிற்சி நிகழ்ச்சிகள் உட்பட முப்பரிமாண அச்சிடல் தொழில்நுட்பம், மெருகூட்டுகை மற்றும் இலத்திரனியல் உலோகப் பூச்சிடுகை தொழில்நுட்ப வசதிகள் போன்ற வசதிகள் நிறுவனம் வசம் காணப்படுகின்றன. அவ்வாவாறே, இரத்தினக் கல் துறை சார்ந்ததாக X-Ray Florescence Spectrometer, Magnetic Separator, specific gravity scale, Laser Diffraction Particle size analyser, Fourier - Transform Infrared Spectroscope, Raman Spectroscope, Ultraviolet-Visible Spectroscope போன்ற நவீன இயந்திரோபகரணங்களும் நிறுவனம் வசம் காணப்படுகின்றன.

❖ **நிறுவனத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் விருத்தி**

பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இந் நிறுவனம் நிலை நாட்டப்பட்டுள்ள பிரதானமான நோக்கங்களுக்குப் புறம்பாகப் பல அபிவிருத்திச் செயற்பாடுகளை செயற்படுத்தக் கூடிய வாய்ப்பை நிறுவனம் தன் வசம் கொண்டுள்ளது. வருடாந்தம் செயற்படுத்தப்படுகின்ற உயர்ந்த தராதர மட்டத்தின் கீழான சான்றிதழ்களை கையளிக்கும் விழாக்களை நடாத்துதல், சர்வதேச தரமுயர்ந்த ஆராய்ச்சி மா நாடுகளை நடாத்துதல், நிறுவனத்தில் ஆராய்ச்சியாளர்களது சங்கத்தை ஆரம்பித்து அதனை முன் கொண்டு செல்லுதல் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளை செயற்படுத்தக் கூடிய திறன் நிறுவனம் வசம் காணப்படுகின்றது.

❖ **கைத்தொழிலின் விருத்தி தொடர்பாக ஒருங்கிணைந்த கூட்டிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் உள் நாட்டு பேண்தகு, சுற்றுச் சூழல் நற்புள்ள மற்றும் நன்னெறி மிக்க விஞ்ஞானவியல் விருத்தியை ஏற்படுத்தும் முகமாக நிறுவனம் தமது செயற்பாடுகளை இயன்றளவுக்கு வெளித் தரப்பு நிறுவனங்களுடன் கூட்டிணைந்து ஒருங்கிணைந்த நிகழ்ச்சியாக செயற்படுத்திய வண்ணமுள்ளது. இதன் கீழ் தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை, புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், தேசிய விஞ்ஞான மன்றம், நூதனசாலை திணைக்களம், பேராதனை, சபரகமுவா மற்றும் ஊவா வெல்லஸ்ஸ போன்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் FGA, தாய்லாந்து இரத்தினக் கல் நிறுவனம் (GTI), பாகிஸ்தான் அரசு போன்ற வெளி நாட்டு அரசுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் கூட்டிணைந்து இந் நிகழ்ச்சிகளை நிறுவனம் கூட்டாக செயற்படுத்திய வண்ணமிருப்பதுடன், மேலும் மேம்படுத்தப்பட்ட கைத்தொழில் தொடர்பாகப் பல்வேறு வெளித் தரப்பு பங்காளிகளுடன் கூட்டிணைந்த நிகழ்ச்சிகளை செயற்படுத்தக் கூடிய திறன் நிறுவனம் வசம் காணப்படுகின்றது.

❖ **நிறுவனத்தின் பிரச்சார நிகழ்ச்சிகள்**

நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட்ட வண்ணம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் கீழ் தற்சமயம் பெருமளவில் பிரச்சார நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்திய வண்ணம் நிறுவனத்தின் நிகழ்ச்சிகளை பிரச்சாரம் செய்வதற்கு இட வசதிகள் கிடைத்துள்ளன. எனினும், இத் துறையின் போக்கின் பிரகாரம் ஒவ்வொரு வயதையுடைய வகுதிகள், பிரதேச ரீதியான வகுதிகள், ஈடுபடுகின்ற தொழில் மற்றும் கைத்தொழிலில் ஈடுபடுவோரது கல்வி மட்ட போன்றவற்றின் பிரகாரம் மேலும் பாரம்பரிய அறிவூட்டல் மற்றும் பிரச்சார நிகழ்வுகளிலும் ஈடுபட்ட வண்ணமுள்ளது.

3.2. சவால்கள்

❖ **தொழில்நுட்ப, உட்கட்டமைப்பு, நிதி மற்றும் பௌதீக வசதிகள் போதுமானதாகக் காணப்படாமை.**

இரத்தினக் கல் துறையுடன் தொடர்புடையதாகத் தொடர்ச்சியாக புதுப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப அறிவுத் திறன், இயந்திரோபகரணங்களது நவீன போக்கு தொடர்பான அறிவுத் திறன் ஆகிய விடயங்கள் காரணமாக இந் நாட்டில் கைத்தொழிலில் ஈடுபடுவோர் பின்னடைவு நிலைக்கு உள்ளாவதை அடையாளம் காணக் கூடியதாகவுள்ளது. அவ்வாறே, சர்வதேச அறிவுத் திறனை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வகையில் அமைந்த உயர் கல்வித் தேவைகள் தொடர்பாக நிறுவனத்தின் பணிக் குழு ஈடுபடக் கூடிய சந்தர்ப்பங்கள் குறைந்த மட்டத்திலேயே நிலவுகின்றன. பயிற்சிப் பாட நெறிகள் மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பாக நவீன இயந்திரோபகரணங்கள் மற்றும் பயிற்சி பெற்ற

உபகரணங்களைப் பயன்படுத்தும் போக்கு குறைந்த மட்டத்தில் நிலவுவதுடன், நிறுவன அபிவிருத்திச் செயற்பாட்டின் போது எதிர்ப்பார் பலன்களை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக இவ் உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாகக் காணப்படாமை தங்கு தடையாக அமையப் பெற்றுள்ளது. அவ்வாறே, நிறுவனத்துக்கென நிரந்தர கட்டிட வசதிகள் காணப்படாமையும் அபிவிருத்திப் பொறி முறையின் போது குறைப்பாடாக காணப்படுகின்றது. நிறுவனத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் தொடர்பாகப் பயன்படுத்தப்படுகின்ற பயிற்சி அலகுகளை சர்வதேசத் தராதர அங்கீகார நிலைகளின் கீழ் விருத்தி செய்ய வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறே, இரத்தினவியல் ஆராய்ச்சி ஆய்வு கூடங்களுக்கென நவீன இயந்திரோபகரணங்களை பெற்றுக் கோள்ள வேண்டியிருப்பதுடன், இதற்கென போதியளவில் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

- **மானிட வளங்கள் அபிவிருத்தி மந்த கதியில் பயணித்தல்**

நிறுவனத்தின் ஊழியர் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணிக்கை 136 ஆகக் காணப்படுவதுடன், தற்சமயம் நிறுவனத்தில் 64 எண்ணிக்கையான ஊழியர்களே பணியாற்றிய வண்ணமுள்ளனர். தற்சமயம் நிறுவனத்தின் செயற்பாடுகளை சுமூகமாகவும், தரமுயர்ந்த வகையிலும் முன்னெடுப்பதற்கு போதியளவான எண்ணிக்கையில் ஊழியர்கள் காணப்படாதிருப்பதுடன், நிறுவனத்தை இயங்கச் செய்வதில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பல பதவிகள் வெற்றிடமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அவ்வாறே, கல்வி சார் நிறுவனமொன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய உயர் கல்வ கற்ற கல்வி சார் பணிக் குழுவின் தட்டுப்பாடும் காணப்படுவதுடன், கல்வி சார் பணிக் குழு தொடர்பாகப் பட்டம் பெற்ற பணிக் குழுவை இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிச் செயற்பாடுகள் தொடர்பாக இன்றளவிலும் மிகப் பெரும் வரவேற்பு காணப்பட்டாலும், மானிட வளங்கள் தட்டுப்பாடு காரணமாக நிறுவனத்தின் செயற்பாடுகளை நன்னெறி மிக்கதாக முன்னெடுப்பதில் தங்கு தடை ஏற்பட்டுள்ளது. இதனால் உள் நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாகப் பயிற்சி இட வாய்ப்புகள் தொடர்பாக பணிக் குழுவை ஈடுபடச் செய்வதன் மூலம் பதவி வெற்றிடங்கள் தொடர்பாகத் துரிதமாக பணிக் குழுவை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது.

- **நிறுவனத்தின் பணிகளை முன்னெடுப்பதன் சட்ட ரீதியான நடப்பு நிலை**

நிறுவனம் நிலை நாட்டப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் இன்றளவிலும் திருத்தத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டியிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. நிறுவனச் செயற்பாடுகளை முன்னெடுக்கையில் இவ் எல்லைகளின் கீழ் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியிருந்தமையால், ஒரு சில செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய இட வசதிகள் கை நழுவியுள்ளன. அதன் பிரகாரம், சர்வதேசத் தராதர நிலைகளின் கீழ் கல்வி நிலையங்களை கண்காணிக்கும் செயன் முறையைத் தயாரிக்க வேண்டியுள்ளது. அவ்வாறே, கைத்தொழிலில் ஈடுபடுவோருக்குத் தரமுயர்ந்த கல்வி நிலைகளை கையளிக்க வேண்டியுள்ளது. மேலும், கைத்தொழிலின் பேண்தகு அபிவிருத்தியை சுவீகரிக்கும் பொருட்டும் சுற்றுச் சூழல் நற்புள்ள கைத்தொழில் தொடர்பாகவும், கைத்தொழிலில் ஈடுபடுவோரது தொழிற் சார் தன்மையை கண்ணியமிக்கதாக தொகுதிக்கு ஏற்றாற் போல் இத் துறை சார்ந்ததாக முன்னெடுக்கும் பொருட்டு இக் கைத்தொழிலுடன் தொடர்புடைய சட்ட ரீதியான பின்னணியைத் தயாரிக்க வேண்டியிருப்பதுடன், அதற்கான கண்காணிப்பு செயன் முறையையும் தயாரிக்க வெண்டியுள்ளது.

- **பூர்த்தியாகாதுள்ள தேவைகள்**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் உயர் கல்வியுடன் கூடிய நிபுணர்களைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் தொடர்பாக மேலும் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. அவ்வாறே, கைத்தொழிலுக்கும், சந்தை வாய்ப்புகளுக்கும் தரமுயர்ந்த உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் பொருட்டும், சுற்றாடல் நேயமிக்க அகழ்வுச் செயன் முறைகள் மற்றும் ஆராய்ச்சிகளை முன்னெடுக்கும் பொருட்டும் தேவையான நவீன தொழில்நுட்பத்துடன் கூட்டிணைந்ததாக நிறுவனத்தை வலுவுட்டும் செயற்பாடு மந்த கதியில் முன்னெடுக்கப்பட்ட வண்ணமிருப்பதுடன், அதனை பேண்தகு வகையாகவும், சீராகவும் விருத்தி செய்ய வேண்டிய நிலையில் நிலவுகின்றது.

4. பணிப்பாளர் சபை அறிக்கை

4.1 நோக்கங்கள்

1993 இன் இலக்கம் 50 ஐ உடைய தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை பாராளுமன்ற சட்டத்தின் 25 (1) ஆவது பிரிவின் பிரகாரம், 1995 ஜூலை 28 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 882 ஐ உடைய வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நிலை நாட்டப்பட்டது. நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாக ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி வசதிகளின் ஊடாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை சீர்ப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகள் காணப்படுகின்றன.

4.2 நிறுவனத்தின் அதிகாரங்கள்

இலங்கையில் இரத்தினக் கல் கனியங்கள் மற்றும் அந் நிதியங்கள் தொடர்பாக ஆராய்தல் மற்றும் அதனுடன் கூட்டிணைந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தி அவற்றை செயற்படுத்துதல்.

4.2.1 இலங்கையில் இரத்தினக் கல் கனியங்கள் தொடர்பாக ஆராய்தல்

(அ) இடவமைப்பு
(ஆ) அடையாளம் காணுதல்
(இ) இரத்தினக் கல் பாகுபாட்டு செயன் முறை
(ஈ) பிற தொடர்புடைய துறைகள் மற்றும் இரத்தினவியல் ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல்

4.2.2 சுரங்க அகழ்வு, இரத்தினக் கல் மெருகூட்டல், தங்காபரண உற்பத்தி, இரத்தினக் கல் எரிவூட்டல் தொடர்பான செயன் முறைகள் மற்றும் தங்காபரண உறுவாக்கம் போன்ற துறை சார்ந்ததாக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை விருத்தி செய்யும் பொருட்டு இயந்திரோபகரணங்களை உறுவாக்கக் கூடிய நுட்பங்களையும், ஏனைய ஆலோசனைகளையும் வழங்குதல்.

4.2.3
(அ) இரத்தினக் கல் வெட்டுகை
(ஆ) தங்காபரண உற்பத்தி
(இ) வைரம் உள்ளடங்கிய இரத்தினவியல்
(ஈ) தங்காபரண அலங்கரிப்புகளைத் தயாரித்தல்
(உ) இரத்தினக் கல் பாகுபாடு
(ஊ) இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் பிற பிரிவுகள் தொடர்பாகப் பயிற்றுவித்தல்

4.2.4 பணிப் பட்டறைகள், மா நாடுகள் போன்றவற்றை நடாத்துதல் மற்றும் தொடர்புடைய மென் பொருட்கள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட பணிகள் தொடர்பாக ஆவணங்கள் மற்றும்ன் புத்தகங்களை வெளியிடுதல்.

4.2.5 நிறுவனத்தின் பணிகள் சீராக முன்னெடுக்கப்படுவதை ஒழுங்கு செய்வதற்குத் தேவையான பிற விடயங்களை முன்னெடுத்தல்.

பயிற்சி பிரிவு

5. பயிற்சிப் பிரிவு

இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் முறையான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி நெறிமுறையை மேம்படுத்துவதன் மூலம், சர்வதேச சந்தைக்கு ஏற்ற உயர்தர மற்றும் தரமான இறுதித் தயாரிப்புகளை உருவாக்கக் கூடிய தொழில்நுட்ப நிபுணத்துவம் கூட்டிணைந்த மனித வளத்தை படிப்படியாக அதிகரிக்கும் முகமாக பயிற்சிப் பாடத் திட்டங்களை உருவாக்குதல், புதிய பாடத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், பயிற்சி மையங்களை விருத்தி செய்தல், பாடத் திட்டங்களுக்கு தேசிய தொழிற் திறன் தகுதிகளை (NVQ) அறிமுகப்படுத்துதல், பிரித்தானியாவின் 'Gem A' (Gemmological Association of Great Britain) அங்கீகரித்த பாடத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பட்டப் படிப்பு நிலையிலான தகுதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல பொறுப்புகள் 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டன.

5.1. பயிற்சிப் பாட நெறிகளை செயற்படுத்துதல்

சர்வதேச சந்தையில் தொழில் முறை நிலைத் தன்மை உருவாக்கப்பட்டிருப்பதுடன் நாளுக்கு நாள் அதிகமதிகம் தேவையுள்ள துறைகளை அடையாளம் கண்டு கொண்டு, அதற்கேற்றவாறு சுமார் 21 பயிற்சி பாடத் திட்டங்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவின் (TVEC) தர நிலைகளுக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டன. தனி நபர் தேவைகளுக்கேற்ப கற்றுக் கொள்ளக் கூடிய குறுகிய கால பாடத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரத்தினக் கல் மற்றும் தங்காபரண தொழிற் துறையின் தொடக்க, இடை நிலை மற்றும் மேம்பட்ட நிலைகள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில் பயிற்சி பாடத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதன் வாயிலாக தொழிற் துறையின் இரண்டு முக்கிய பிரிவுகளான இரத்தினக் கல் துறை மற்றும் தங்காபரணத் துறை சார்பாக 1,334 பயிற்சியாளர்களை 2024 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இதன் கீழ் ரூ. 33.88 மில்லியன் வருமானத்தை நிறுவனம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பயிற்சிப் பாட நெறி		2022 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை	2023 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை	2024 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை
01	முதல் நிலை இரத்தினவியல்	147	229	218
02	இரத்தினவியல்	148	240	204
03	இரு முக இரத்தினவியல்	22	22	16
04	இரத்தினக் கல் நிறப் பாகுபாடு மற்றும் விற்பனை	24	23	-
05	கெவுட வெப்பமயமாக்கல் மெருகூட்டுகை	102	212	117
06	இரத்தினக் கற்கலின் அலங்கார வெட்டுகை	07	-	-
07	இரத்தினக் கல் வெட்டுகை மற்றும் மெருகூட்டல் NVQ 3 / NVQ 4	235	429	400
08	இரத்தினக் கல் வெட்டுகை மற்றும் மெருகூட்டல் - 10 நாட்கள்	8	18	46
09	இரத்தினக் கற்கலின் விலைகளை மதிப்பிடுதல் மற்றும் விற்பனை	-	36	-
10	தங்காபரண அலங்கார உறுவமைப்பு	69	80	53
11	கணினி சார்ந்த தங்காபரண அலங்கார வடிவமைப்பு	17	57	57
12	தங்காபரண உற்பத்தி NVQ 4	25	138	105
13	அலங்கார ஆபரண உற்பத்தி	15	-	08
14	ஆபரணங்களுக்கு கற்கலிடுதல்	30	38	46
15	மெருகூட்டல் மற்றும் இலத்திரனியல் உலோகப் பூச்சிடுகை	-	10	07
16	இரத்தினவியல் டிப்ளோமா	13	23	40
17	தங்காபரண டிப்ளோமா	-	13	-
18	குறுகிய காலப் பாட நெறிகள்	07	09	17
	முழு மொத்தம்	**869**	**1577**	**1334**



அட்டவணை 1 - மாணவர் சேர்க்கை எண்ணிக்கையின் விருத்தி



ஆண்டு	வருமானம் ரூபா. மில்லியன்
2019	13.06
2020	8.2
2021	3.3
2022	12.86
2023	30.4
2024	33.88

அட்டவணை 2 - வருமானமீட்டல் விருத்தி

5.1.1. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த தொழிற் சார் தகைமைகளை உறுதிப்படுத்துதல் RPL செயன் முறையின் கீழ் சான்றிதழ்கள் வழங்கப்படும் செயன் முறையை ஆரம்பித்தல்

கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய சீரான கற்கை மற்றும் திறன்கள் இருந்த போதிலும், அதன் கீழான தொழில் முனைவர்களுக்கு அதிகாரப்பூர்வ சான்றிதழ்கள் இல்லாத நிலையில், தொழில் அறிவு மற்றும் அனுபவம் கொண்ட கலைஞர்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெறத் தக்க சான்றிதழ்களை வழங்கும் முகமாக, முன்பு பெறப்பட்ட அறிவுத் தகுதி மதிப்பீடு (Recognition of Prior Learning - RPL) திட்டம், 2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் நிறுவனத்தின் வருவாய் மேம்படுவதற்கான வாய்ப்பும் உருவாக்கப்பட்டது.

5.2. பயிற்றுவிப்பு நிலையங்களின் விருத்தி

நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில், நிறுவனத்தின் தலைமை அலுவலகத்துடன் சேர்த்து, இவ் வருடத்தில் 15 பிராந்திய மத்திய நிலையங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடுவெல, இரத்தினபுரி, கண்டி, அத்தனகல்ல, நிவிதிகல, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளை, லக்கல, சேனபுரம், மருதானை, இரத்தினபுரி இளைஞர் சேவை சபை, கம்பளை, காலி மற்றும் நாஉல ஆகியன அம் மத்திய நிலையங்களாகும்.

5.3. இரத்தினக் கல் மற்றும் தங்காபரண தொழிற் துறையின் கல்வி மேம்பாடு

5.1.1. இரத்தினக் கல் பாடத் திட்டத்தை NVQ 5 / 6 தகுதித் தரத்திற்கு தகுந்த வகையில் மேம்படுத்தல்

இரத்தினக் கல் பாடப் பிரிவிற்காக தேசிய தொழிற் சார் தகுதிகள் 5 / 6 (NVQ 5 / 6) தரத்தை பெறும் முகமாக பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பயிற்சிப் பாட நெறிகள் நடைமுறைப்படுத்தும் திறனை கையளிக்கும் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.3.2. பிரித்தானிய இரத்தினவியல் சங்கத்தின் (GEM-A) உறுப்பினராக சேருவதற்கான தகுதிகளை வழங்கும் பாடநெறிகளை செயற்படுத்துதல்

இரத்தினக் கல் துறையில் தொழில் முறை ஆளுமையை அங்கீகரிக்கும் ஒரு முக்கியமான சர்வதேச தகுதியாகக் கருதப்படும் GEM-A (பிரித்தானிய இரத்தினவியல் சங்கம்) பாட நெறியை கற்றறிந்து, அதன் மூலம் FGA (பிரித்தானிய மாணிக்கவியல் சங்க உறுப்பினர்) தகுதியை பெறுவதற்கான கல்வி மையமாக 2024 ஆம் ஆண்டு தொட்டு இந் நிறுவனம் செயற்படத் தொடங்கியுள்ளது. இதன் மூலம், FGA தகுதியை பெரும் பொருட்டு வெளிநாடு செல்வதை விட, இந் நாட்டிலேயே எமது நிறுவனத்தின் வாயிலாக அப் பாட நெறிகளை கற்றறிந்து குறித்த தகுதிகளை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளூரிலுள்ள நபர்களுக்குக் கிடைக்கின்றது. இதன் வாயிலாக இந் நிறுவனத்தின் கல்விச் சேவைகளை விரிவுபடுத்துவதோடு மட்டுமன்றி, வருமானத்தை அதிகரிக்கும் திறனும் மேலுயரும்.

5.3.3. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறைக்கான பட்டதாரி தகுதியை வழங்கல்

இரத்தினக் கல் மற்றும் தங்க நகைத் தொழில் துறை சார்ந்த அடிப்படை சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா தகுதிகளை பெற்ற மாணவர்களுக்கு, அதற்கேற்ற பட்டதாரி தகுதியைப் வழங்கும் நோக்கில், இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை அடிப்படையாகக் கொண்ட பாட நெறிகளை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் வழியாக உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

5.3.4. பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழாவை நடாத்துதல்

2023/2024 கல்வியாண்டிற்காக இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா 2024 டிசம்பர் 19 ஆம் திகதியன்று நடைபெற்றது. இவ் விழாவின் மூலம் நிறுவனம் பயிற்சி வழங்கிய மாணவர்களின் தகைமையை முறையாக அங்கீகரித்து, அவர்களுக்கு தொழிற் துறை சார்பாக அறிமுகப்படுத்துவதுடன், அவர்களுக்கு ஊக்கம் வழங்கும் சூழலையும் உருவாக்கியுள்ளது. இது நிறுவனம் மற்றும் மாணவர்கள் இடையிலான உறவை வலுப்படுத்தி, அவர்களின் கல்வி சிறப்பை வெளிக் கொணருவதன் மூலம் நிறுவனத்தின் நற் பெயரையும் மேம்படுத்துகின்றது. மேலும், இந் நிகழ்வு தொடர்புடைய பிற நிறுவனங்கள் மற்றும் நபர்களுடன் உறவுகளை உருவாக்குவதற்கான ஒரு மேடையாகவும் அமைகின்றது. சான்றிதழ் வழங்கும் விழா, மாணவர்களின் தொடர்ச்சியான கல்வி மற்றும் தொழில் முனைவு வளர்ச்சிக்கான விருப்பத்தை ஊக்குவிப்பதுடன் , தொழிற் துறையின் தேவைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்த நிபுணர்களை உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்கின்றது. இவ் விழாவில், 220 மாணவர்கள் தொழில் முறை சார்ந்த தகுதிச் சான்றிதழ்களை பெற்றுப் பயனடைந்தனர்.

5.4 இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையினது தொழில்நுட்ப வளர்ச்சி

5.4.1 தொழில்நுட்பப் பயிற்சி பணிப் பட்டறைகளை நடாத்துதல்

இரத்தினக் கற்களை அடையாளம் காணுதல், வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல், வெப்ப சிகிச்சை மற்றும் பிலியன் நிரப்புதல் போன்ற இரத்தினக் கற் துறையைச் சார்ந்த பல தொழில்நுட்பப் பயிற்சி பணிப் பட்டறைகள், வெளி நிறுவனங்களை மையமாகக் கொண்டு 2024 ஆம் ஆண்டு முழுவதும் நடாத்தப்பட்டன. அதே போன்று, தங்காபரண தொழிற் துறையுடன் தொடர்புடைய வங்கித் துறையில் காணப்படும் உயர் தரப் பயிற்சி தேவையை பூர்த்தி செய்யும் வகையில், தங்க நகைகளின் தராதர நிலைகளை பேணுதல், தரவாக்கம், போலித் தங்கப் பொருட்களை அடையாளம் காணும் செயன் முறைகள் மற்றும் தங்க நகைகளின் கீழான அடமையின் நடை முறைகள் தொடர்பான தொழில் முறைப் பயிற்சி வேலை முறைகளும் வங்கி அமைப்புகளை மையமாகக் கொண்டதாக இவ் ஆண்டு கால கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

5.5. பயிற்சி பெற்ற பயனாளர்களை தொழிற் துறையுடன் கூட்டிணைத்தல்

2024 ஆம் ஆண்டு, இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையை மையமாகக் கொண்டதாக பயிற்சி பெரும் முகமாக சேர்ந்த 1332 மொத்தப் பயனாளர்களில், 507 பேர் 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தங்களின் பாட நெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்து பயிற்சியை முடித்துள்ளனர். மீதமுள்ள பாடநெறிகள் தற்போது நடைமுறையில் உள்ளன. இந்த பயனாளர்களில் தொழில் துறையில் வேலை வாய்ப்புகளை விரும்பும் மாணவர்கள், இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையில் நிலவுகின்ற நம்பிக்கைக்குரிய தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு, அவர்களைத் தொடர்புடைய தொழிற் துறையுடன் கூட்டிணைக்கும் செயன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி பிரிவு

6.1 2024 ஆராய்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

6.1 கருத்திட்டம் :- இலங்கையின் இரத்தினக் கல் கணியங்களின் ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு

ஆராய்ச்சிப் பிரிவு

இத்திட்டத்தின் வாயிலாக, இலங்கையில் நிலவுகின்ற இரத்தினச் சுரங்கங்கள் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்யச் செய்வதுடன், 1:50,000 அளவு கோலில் வரைபடத் தொகுப்பொன்றை உருவாக்கும் முகமாக, பிரதேசச் செயலக பிரிவு மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றது. இதன் கீழ், ஒவ்வொரு பிரதேசச் செயலக மட்டத்திலும் தொடர்புடைய இரத்தின வள வரை படமும் தொழில்நுட்ப அறிக்கையும் தயாரிக்கப்படுகின்றன.

6.1.1 கொலொன்ன பிரதேசச் செயலக பிரிவு

இப் பிரிவு இரத்தினபுரி மாவட்டத்தின் தெற்குப் பகுதிக்கு உரிய எல்லையாக அமைந்துள்ளது. எராப்போருவ ஆறும் அதன் கிளை நதிகளும் சார்ந்த நீர் மூலக் களஞ்சியம், ஆதாலுவ ஆற்றின் நீர் மூலக் களஞ்சியம், ஹல்வின்ன பகுதியைச் சார்ந்த சேதப் படிவு களஞ்சியம் மற்றும் கினிகல்கொட பகுதியைச் சார்ந்த சேதப் படிவு களஞ்சியம் ஆகியவை இப் பகுதியில் காணப்படும் பிரதானமான இரத்தினக் கல் களஞ்சியங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இத் திணிப்புகளில் நீலம், புஷ்பராகம், கெவுட, கிரிஞ்சி, தோரமல்லி மற்றும் ஜாகூங் போன்ற இரத்தின வகைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. முழுப் பிரதேச பிரிவு சார்பாகவும் செயலில் உள்ள இரத்தினச் சுரங்கங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. சுமார் 20-30 அடி ஆழமுள்ள கிணறு இல்லாத திறந்த சுரங்கங்களின் மூலமும், சுமார் 5-20 அடி ஆழமுள்ள மற்றும் ஆழமற்ற சுரங்கங்களின் வாயிலாகவும் இரத்தினத் தோண்டல் செயன் முறைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், கினிகல்கொட பகுதியைச் சேர்ந்த சேதப் படிவு களஞ்சிய மையத்தில் சுமார் 150 அடி ஆழமுள்ள கிணறு வடிவச் சுரங்கங்கள் காணப்படுவதை கவனிக்க முடிகின்றது.

	
படம் 01 - கொலொன்ன பிரதேசச் செயலக பிரிவினது அடிப்படை இரத்தின வள வரை படம்	*படம் 02 - கொலொன்ன பிரதேசச் செயலக பிரிவைச் சார்ந்த இரத்தினக் களஞ்சியங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள்*

6.1.2 பெல்மடுல்ல பிரதேசச் செயலக பிரிவு

இரத்தின வள வரை படமும், அறிக்கையும் ஆய்வு கூடத் தரவின் அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தேனவக் ஒய, வே ஆற்றின் நீர் மூலக் களஞ்சியம், நீலகம மற்றும் மொரதொட்ட பிரதேசங்கள் சார்ந்த சேதப் படிவு இரத்தினக் களஞ்சியங்களும் இப் பகுதியின் பிரதான இரத்தினக் களஞ்சியங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் நீலம், ரத்தினம், புஷ்பராகம், கெவுட, கிரிஞ்சி, தோரமல்லி, ரபகஹ மற்றும் ஜாகூங் போன்ற இரத்தின வகைகள் பெருமளவில் காணப்படுகின்றன எனும் விடயமும் அவதானிக்கப்பட்டது.



படம் 03 - கொலொன்ன பிரதேசச் செயலக பிரிவின் அடிப்படை இரத்தின வள வரை படம்



படம் 04 - பெல்மடுல்ல பிரதேசச் செயலக பிரிவின் இரத்தின வள வரை படம்

6.1.3 அயகம பிரதேசச் செயலாளர் பிரிவு

இரத்தினக் கல் வள வரை படமும், அறிக்கையும் ஆய்வக தரவின் அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. களு கங்கை, கலதுற ஓய, ஹீன் கங்கை, பஸ்கங் எல, தியலு நிதி மற்றும் பல்லெகட பகுதிகளில் உள்ள எஞ்சியுள்ள இரத்தினக் கல் சுரங்கங்கள் பிரதானமான இரத்தினக் கல் வளங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், நீலக்கல், புஷ்பராகம், கெவுட, கிரிஞ்சி, தோரமல்லி, ரூபி மற்றும் ஜாகுங் போன்ற இரத்தினக் கல் வகைகள் பரவலாகக் காணப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.



படம் 05 - அயகம பிரதேச மாதிரிகளின் ஆய்வக ஆய்வு முடிவுகள்



படம் 06 - அயகம பிரதேசச் செயலாளர் பிரிவின் இரத்தினக் கல் வள வரைபடம்

2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடியாத நிலையிலிருந்த இங்கிரிய, தெஹிஓவிட்ட மற்றும் கிரிஎல்ல ஆகிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்கான இரத்தினக் கல் வள வரை படங்கள் தயாரிக்கப்பட்டு, அதனுடன் தொடர்புடைய அறிக்கைகளை தயாரிக்கும் செயன் முறைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.



படம் 07, 08, 09 - இங்கிரிய, தெஹிஓவிட்ட மற்றும் கிரிஎல்ல பிரதேசச் செயலாளர் பிரிவுகளின் இரத்தினக் கல் வள வரை படம்

இரத்தினக் கல் அகழ்வு மணலில் எஞ்சியிருக்கும் அரிய நிலக் கனிமங்கள் , Au மற்றும் ஏனைய அரிய உலோகங்களைப் பெறுதல் தொடர்பான ஆய்வின் முகமாக, இரத்தினபுரி களு கங்கை மற்றும் மகாவலி கங்கையின் ஆற்றுப் பகுதிகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் கொரண்டம் (குருவிந்த) தோற்றம் குறித்த ஆய்வின் பொருட்டு, இரத்தினபுர, கொலொன்ன, புத்தல, எலஹெர மற்றும் பகமூன ஆகிய பகுதிகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் ஆய்வு கூடங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

6.2 <u>கருத்திட்டம் :- இரத்தினக் கற்களுக்கு பெறுமதி ஒன்று சேர்க்கையை ஊக்குவித்தல்</u>

6.2.1. கருமேக நிற மாங்கு தோரம் மீது வெப்ப சிகிச்சையை முன்னெடுத்தல் மற்றும் அதன் நிற மாற்றத்தை ஆராய்தல்

கருமேக நிற மாங்கு தோர்மலின் (Tourmaline) மீது பல்வேறு நிபந்தனைகளின் கீழ் வெப்ப சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் நிற மாற்றங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இவ் ஆய்வின் பிரகாரம், வெப்ப சிகிச்சைகளின் போது UV-Visible மற்றும் FTIR உறிஞ்சல் வண்ண வரிசைகளில், Fe மற்றும் Mn அயன்களின் ஒழுங்கமைவு மாறுபடுவது புலனாகியதுடன், அதன் விளைவாக மஞ்சள் நிறம் பழுப்பு நிறமாக மாறுபடுவது அவதானிக்கப்பட்டது (படம் 10).



படம் 10 - UV-Visible மற்றும் FTIR உறிஞ்சல் வர்ண வரிசைகள் முறையே வெப்ப சிகிச்சைக்கு முன்பு மற்றும் பின்பு ஆகிய நிலைகளை சுட்டிக் காட்டுகின்றன.

6.2.2. யங் கெவுட் லக்மினி உலை வாயிலாக வெப்ப சிகிச்சை செய்து நிறத்தை மேம்படுத்தும் சாத்தியக் கூற்றை ஆய்வு செய்தல்

இலங்கையில் காணப்படுகின்ற யங் கெவுட, 1850 C அதி உச்ச வெப்ப நிலையில் ஒக்சிஜனிடல் சூழ் நிலையின் கீழ் 2 மணி நேரத்திற்கு வெப்ப சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது. பின்னர், அம் மாதிரிப் பளிங்குகள் 1300 - 1400 C, 1400-1500 C, மற்றும் 1500-1600 C வெப்ப நிலைகளின் கீழ் தலா 12 மணி நேரம் வெப்ப சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டன. அதன் பிற்பாடு அவற்றின் நிறம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இதன் போது UV - Visible உறிஞ்சல் வர்ண வரிசையும் FTIR வர்ண வரிசையும் கருத்திலெடுக்கப்பட்டு, இரண்டாவது வெப்ப சிகிச்சைக்குப் பிந்தைய நிலையில் நிறம் குறைவடைவது அவதானிக்கப்பட்டது (படம் 11).



படம் 11 - வெப்ப சிகிச்சைக்கு முன் மற்றும் இரண்டாவது வெப்ப சிகிச்சைச் செயற்பாட்டின் கீழான உறிஞ்சல் வர்ண வரிசைகள்

6.2.3. ராமன் உறிஞ்சல் வர்ண வரிசை மற்றும் மேற்பார்வை புகைப்படங்களின் உதவியுடன் வெப்ப சிகிச்சைக்கு முன் நிறத்தை கணிக்கும் மாதிரியுரு

கெவுட கைத்தொழிலின் மிக முக்கியமான சிக்கல், வெப்ப சிகிச்சைக்கு முன் கெவுடவில் பெற்றுக் கொள்ளக் கூடிய நிறத்தை முன்னறியக் கூடியதாகவிருப்பதாகும். இதற்காக, வெவ்வேறு வகை 160 மாதிரி கெவுடகள் வெப்ப சிகிச்சைக்கு முன் மிக உயர்ந்த துல்லியத்துடன் ராமன் உறிஞ்சல் வர்ண வரிசை மற்றும் மேற்பார்வை புகைப் படங்களுடன் கூடியதாக பதிவு செய்யப்பட்டன. பின்பு அம் மாதிரிகள் வெப்ப சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, அவற்றின் நிறம் GIA வர்ணத் தர வரிசைப் படி வகைப்படுத்தப்பட்டது. பிற்பாடு Pythan பயன்பாட்டின் மூலம் ஒரு இயந்திர கற்கை மாதிரியுரு உருவாக்கப்பட்டது. இதன் போது ராமன் வர்ண வரிசை ஆய்வுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாதிரிகள் 80% சதவீத வெற்றியுடன், மேற்பார்வை புகைப் படங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாடல் 50% சதவீத செயற்பட்டது. இம் மாதிரியுரு தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.



படம் 12 - ராமன் உறிஞ்சல் வர்ண வரிசைகள் காட்டப்பட்டுள்ளன. இத் தரவுகள் மாதியுரு உருவாக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது.

6.2.4. நீல நிறம் கிடைக்காத வண்ணம் சிவப்பு கெவுட வெப்ப சிகிச்சை செயன் முறை

மேலதிக ஒக்சிசனை மூன்றாவது வாயுவாக லக்மினி உலைக்கு வழங்குவதன் மூலம், சிவப்பு கெவுட வெப்ப சிகிச்சையின் போது நீல நிறம் உருவாகாமல் தடுக்க முடியுமென உறுதி செய்யப்பட்டது. வெப்ப சிகிச்சைக்கு முன் மற்றும் பின் சிவப்பு கெவுடகளின் நிற மாற்றம் தொடர்பாக படம் 13 மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



படம் 13 - சிவப்பு கெவுட, வெப்ப சிகிச்சைக்கு முந்திய மற்றும் பிந்தைய நிலைகள்

6.3 <u>கருத்திட்டம் :- இரத்தினக் கற்களின் நிறத்தை மேம்படுத்தும் வகையில் மூன்றாம் நிலை வாயுவின் (H_2, N_2, Ar, CO_2) தாக்கத்தை கண்டறிதல் மற்றும் மின் உலையைப் பயன்படுத்தி கெவுட்களுக்கு வெப்ப சிகிச்சை நிலைகளை நிறுவுதல்</u>

லக்மினி உலையின் உதவியுடன் வெப்ப சிகிச்சை செய்யும் போது, மூன்றாவது வாயுவை வழங்குவதன் மூலம் குறைந்தளவில் தரமான இரத்தினக் கற்களின் நிறத்தை மேம்படுத்தும் தாக்கம் தொடர்பாக இற்றை வரை அறிவியல் ரீதியாக எவ்வித ஆய்வுகளும் முன்னெடுக்கப்படவில்லை. எனவே, இதன் பொருட்டு தற்சமயம் இரத்தினக் கல் துறை சார்ந்த லக்மினி உலையை புதுப்பித்து (படம் 14), மூன்றாவது வாயுவை வழங்குவதன் தாக்கத்தை ஆய்வு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.



படம் 14 - புதுப்பிக்கப்பட்ட லக்மிணி உலை மற்றும் மூன்றாவது வாயு வழங்கும் அலகு

6.4 <u>சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை நடாத்துதல்</u>

இரண்டாவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு 2024.08.02 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த மா நாட்டு மண்டபத்தில், தாய்லாந்தின் GIT நிறுவன அதிகாரிகளின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்புடன், ஆராய்ச்சி சுருக்கங்கள் (Abstracts) 17 முன் வைக்கப்பட்ட வண்ணம் அதீத வெற்றியுடன் நடாத்தப்பட்டது.

படம் 14, 15, 16 -ஆராய்ச்சி மா நாட்டு வாய்ப்புகள் மற்றும் அதன் ஆராய்ச்சி நூல்கள்

6.5 கருத்திட்டம் :- நனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வண்ணம் நிறமுள்ள தங்கம் கலப்புற்ற உலோகமொன்றை உற்பத்தி செய்தல்

தங்க நனோ அணுக்களை உருவாக்கக் கூடிய நவீன செயன் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கான இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் செயன் முறைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

படம் 04 - வண்ணமயமான தங்கம் கலப்புற்ற உலோகமொன்றை உருவமைக்கும் பொருட்டு ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல்

6.6 கருத்திட்டம் :- ஆய்வு கூட தராதர முகாமைத்துவத் தொகுதியை நிறுவுதல்

ISO 17025:2017 எனும் தராதர நிலை அங்கீகாரத்தின் பிரகாரம் நிறுவன ஆய்வு கூட தராதர அங்கீகார செயன் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென கைத்தொழில் தொழில்நுட்ப ஆலோசகரின் வழிகாட்டலின் கீழ் தொடர்புடைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அங்கீகாரப் பணிகளுக்கான தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பக்கப்படவுள்ளன. ஆய்வு கூட தராதர முகாமைத்துவம் தொடர்பான முழு மொத்தச் செயன் முறையும் 2025 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நிறைவு செய்வதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

6.7 இலங்கையில் இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறை சார்ந்த மற்றும் திறன் குறைபாடுகளை இனங் காணும் ஆராய்ச்சி

உரித்தான பிரதான செயன் முறைகள் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்துடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான விலை மனு தயாரிப்பு செயன் முறைகள் இறுதிக் கட்டத்தில் நிலவுகின்றன.

6.8 இலங்கையில் இரத்தினக் கல்லியல் துறைக்கான சுற்றுலாக் கருத்திட்டமொன்றை நிறுவுதல் தொடர்பான ஆராய்ச்சி

இரத்தினக் கல் துறை சார்ந்த நபர்களிடமிருந்து நிரப்பப்பட்ட சுமார் 200 வினாத் தாள்கள் சேகரிக்கப்பட்டதுடன், தற்சமயம் அத் தரவுகளின் பகுப்பாய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

6.9 கருத்திட்டம் :- நூல் வெளியீடு

கெவுட வெப்ப மெருகூட்டல் தொடர்பான நூல் வெளியீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ள இந் நூலில், தற்சமயம் நான்கு அத்தியாயங்கள் நிறைவடைந்துள்ளன.

6.10 கருத்திட்டம் :- பணிப் பட்டறைகள்

6.10.1 உயர் தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்தி இரத்தினக் கல் பகுப்பாய்வு தொடர்பான பணிப் பட்டறைகள்

இரத்தினக் கல் துறை சார்ந்த உயர் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி இரத்தினக் கல் பகுப்பாய்வு தொடர்பான விழிப்புணர்வு பணிப் பட்டறைகள் (Workshop on Advanced Instrumental Analysis for Gemmology) 2024.11.30 மற்றும் 2024.12.01 அன்று, நிறுவன ரீதியான உயர் தொழில்நுட்ப ஆய்வு கூடத்தில் இரத்தினக் கல்லியல் தொடர்பாக 12 நபர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. இதன் வாயிலாக 2023 ஆண்டு கால கட்டத்தில் நிறுவனத்தினால் ரூபா 176,000.00 வரையிலான வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

படம் 17 - உயர் தொழில்நுட்ப உபகரண பணிப் பட்டறை

6.10.2 கெவுட வெப்ப மெருகூட்டல் புதிய அறிவுத் திறனை பகிர்ந்து கொள்ளும் பணிப் பட்டறை

2024 ஆண்டில் கெவுட வெப்ப மெருகூட்டல் தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவை பகிர்ந்து கொள்ளும் பொருட்டான 2 பணிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. அவையாவன:

- ❖ கெவுட வெப்ப மெருகூட்டல் தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவை பகிர்ந்து கொள்ளும் 05 நாள் பணிப் பட்டறை - பேருவல
- ❖ கெவுட வெப்ப மெருகூட்டல் தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவை பகிர்ந்து கொள்ளும் 02 நாள் பணிப் பட்டறை - கண்டி

மேலே கூறப்பட்ட பணிப் பட்டறைகள் மிகச் சிறந்த உயர் வெளிப் பாடுகளை காட்டிய நிலையில் நிலவுகின்றன. மேலும் பணிப் பட்டறை தொடர்பான மதிப்பீட்டுப் படிவங்களின் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. பேருவல மற்றும் கண்டி ஆகிட பிரதேசங்களில் நடைபெற்ற பணிப் பட்டறைகள் தொடர்பான உருப் படம் 18 இன் மூலம் வெளிக் காட்டப்பட்டுள்ளன.

கெவுட வெப்ப மெருகூட்டல் தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவை பகிர்ந்து கொள்ளும் 05 நாள் பணிப் பட்டறை - பேருவல	கெவுட வெப்ப மெருகூட்டல் தொடர்பான புதிய தொழில்நுட்ப அறிவை பகிர்ந்து கொள்ளும் 02 நாள் பணிப் பட்டறை - கண்டி
படம் 18 - 2024 ஆண்டில் நடாத்தப்பட்ட பணிப் பட்டறைகள்	

6.11 <u>கருத்திட்டம் :- பிரசுரிப்புகளை வெளியிடல்</u>

- **Jayasinghe, R.M.N.P.K.** 2024. Sedimentology and Geochemistry of Kalu River Gem-Bearing Sediments in Sri Lanka: Implication for Provenance and Paleoclimate, Himanshu Pablications, India. pp. 346-369.

- **Jayasinghe R.M.N.P.K.** 2024. Sedimentology and Geochemistry of Kalu River Gem-Bearing Sediments in Sri Lanka: Implication for Provenance and Palioclimate.

Proceedings of International Conference of Department of History, Mohanlal Sukhadia University, Udaipur, Rajastan, India, pp 73.

- **S. Illangasinghe**, H. M. M. Kulasooriya, Y. Zhang, M. Chen, L. V. Ranaweera, N. Jayasinghe. Characterization of a new type of Sinhalite from Sri Lanka: Microscopic Inclusions, 3D Fluorescence Imaging, and Trace Element Analysis. *The Gemmologists Association Research Symposium, 30th November 2024, Colombo, Sri Lanka.*

- K. U. K. Kodikara, U. L. T. S. Randeepa, V. Wickramarathna, **S. Illangasinghe**, C. Wawegedara, N. Jayasinghe. Identification of Potential to Develop Gem Tourism in Rathnapura District, Sri Lanka. *The Gemmologists Association Research Symposium, 30th November 2024, Colombo, Sri Lanka.*

- H. P. K. Seenigama, P. G. B. L. Bandara, R. G. C. Jaliya, **S. Illangasinghe**. Raman Spectroscopic Investigation of Fluorescent and Non-Fluorescent Sri Lankan Corundum. *The Gemmologists Association Research Symposium, 30th November 2024, Colombo, Sri Lanka.*

- **S. Illangasinghe**, Y. Zhang, M. Chen, N. Jayasinghe. Colour Zoning in Heat-Treated Geuda Sapphire due to Trace Element Composition. *The Gemmologists Association Research Symposium, 30th November 2024, Colombo, Sri Lanka.*

- V. Wickramarathna, **S. Illangasinghe**, C. Jaliya, C. Arthanayaka. Investigating Heat Treatment Effect on Sri Lankan Black/Brown (Maangu) Tourmaline: A Study of Colour Transformation and Clarity Enhancement. *The Gemmologists Association Research Symposium, 30th November 2024, Colombo, Sri Lanka.*

- P. G. B. R. L. Bandara, A. H. P. K. Seenigama, R. G. C. Jaliya, **S. Illangasinghe**. Differentiating Madagascar and Sri Lankan Low-grade Sapphire using UV-visible spectroscopy. *The Gemmologists Association Research Symposium, 30th November 2024, Colombo, Sri Lanka.*

- S. Diyabalanage, **S. Illangasinghe**, N. Jayasinghe. Application of Geochemical Signature of Sediments to Delinate Gem Potential Area: Preliminary Investigation in Neelagama, Ratnapura, Sri Lanka. *The Gemmologists Association Research Symposium, 30th November 2024, Colombo, Sri Lanka.*

- G. L. H. Ramadasa, **S. Illangasinghe**, N. Jayasinghe, R. M. N. P. Rathnayake, P. D. Mahakumara, N. Ranasinghe, J. Senanayake, H.M.V.T. Welegama, S. Diyabalanage. Potential Detection Method for Gamma-Irradiated Rubies and Pink Sapphires Using UV-

Visible and Infrared Absorption Spectroscopy. *The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

- **S. Illangasinghe**, H. M. M. Kulasooriya, Y. Zhang, M. Chen, L. V. Ranaweera, N. Jayasinghe. Discovery and Characterization of High-Silica Sinhalite ($MgAlBO_4$) in Kiriella, Sri Lanka. *The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

- P. R. U. S. Jayarathna, M. D. O. R. Jayalal, N. Manthreerathne, S. Illangasinghe, P. Jayasinghe. Enhancing the Beauty of Purple Geuda Spinel from Sri Lanka through Heat Treatment. *The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

- **M.A.N.C. Manthreerathne**, M.N.M. Rifkhan, A.D.C. De Silva, M.H.M. Shamri, R.M.N.P.K. Jayasinghe. Evaluation of Non-Mercury Methods for Gold Refining in the small scale Jewellery Sector: AComparatibe study. *The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

- **W.R. Lakshanthi**, M.D.O.R. Jayalal, P.R.U.S. Jayarathna, S. Wijewardhane, Pathmakumara Jayasingha, R.M.N.P.K. Jayasinghe Identification of Potential Gem Tourism Sites and their Geospatial Distribution in Ratnapura District, Sri Lanka; An AHP and GIS approach. *The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

- Suneth Neranjan, Pathmakumara Jayasingha, R.M.N.P.K. Jayasinghe, I.K.M.S.C.K. Illangasinghe. Application of Step Frequency Ground Penetration Radar (SFGPR) for Detecting Illegal Underground Tunnel Gem Mining in Ratnapura, Sri Lanka.*The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

- D.M. Magalage, W.G.C.N. Wewegedara, R.S. Diyabalanage, R.M.N.P.K. Jayasinghe. Comparative Analysis of Untreated and Heat-Treated Sapphires from Different Localities within Sri Lanka by FT-IR Spectroscopy. *The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

- M.H.M. Shamri, M.I. Ibrahim, B. Kowarthanan, M.A.N.C. Manthrirathna,R.M.N.P.K. Jayasinghe. Investigating Colour Variation in Sri Lankan Blue Sapphires using Raman Spectroscopy Analysis. *The GJRTI International Research Symposium, 2024. 2nd August 2024, BMICH, Colombo, Sri Lanka.*

6.12 கருத்திட்டம் :- தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்

6.12.1 தனியார் நிலங்களில் இரத்தினக் கல் நிதியங்களை ஆராய்ச்சி செய்தல்

பதுளை மாவட்டத்தின் ஹபுத்தலை பிரதேசச் செயலக பிரிவிலுள்ள வெலங்கின்ன கிராம சேவகர் பிரிவின் கிரிந்த கிராமத்தில் அமைந்துள்ள, பேரவத்த நிலப் பகுதியில் ஆராய்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



படம் 19 - தனியார் நிலத்தில் இரத்தினக் கல் நிதிகளின் இடவமைப்பு தொடர்பான ஆராய்ச்சி

6.12.2 வெப்ப மெருகூட்டல் சேவைகள்

பணம் அறவிடப்பட்டு முன்னெடுக்கப்படுகின்ற வெளித் தரப்பு நபர்களுக்கான கெவுட வெப்ப மெருகூட்டல் சேவை வழங்குகையின் கீழ் லக்மினி அடுப்பின் வாயிலாக 05 சேவைகள் வழங்கப்பட்டு, இவ் வருட கால கட்டத்தில் ரூபா 100,000 வரையிலான வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

6.12.3 உயர் தொழில்நுட்ப ஆய்வு கூட சேவைகள்

ஆய்வு கூட பகுப்பாய்வு சேவைகளை கையளிக்கும் செயன் முறையின் கீழ் ED-XRF பகுப்பாய்வு தொடர்பாக 06 மாதிரிகள் மற்றும் Raman பகுப்பாய்வு தொடர்பாக 13 மாதிரிகள் ஆராயப்பட்டதன் வாயிலாக 2024 ஆம் ஆண்டில் நிறுவனத்தால் ரூபா 98,600 வரையிலான வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவு

7.1 2024.12.31 ஆம் திகதியிலிருந்த படியான பணிக் குழு தொடர்பான தகவல்கள்

பதவி / வகுப்பு		அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	தற்சமயம் பணியாற்றுகின்ற எண்ணிக்கை	பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	HM 2-1	1	0	1
பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி)	HM 1-1	1	1	0
பணிப்பாளர் (ஆராய்ச்சி)	HM 1-1	1	0	1
முதுநிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர் (ஆராய்ச்சி)	AR-2	1	1	0
முதுநிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர் (வர்ண அதிகரிப்பு)	AR-2	1	0	1
முதுநிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர் (புத்தாக்கம்)	AR-2	1	0	1
உதவிப் பணிப்பாளர் (நிர் மற்றும் மானிட வளங்கள்)	MM 1-1	1	0	1
உதவிப் பணிப்பாளர் (நிதி)	MM 1-1	1	1	0
உதவிப் பணிப்பாளர் (நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விடயப் பரப்பு விருத்தி)	MM 1-1	1	1	0
உதவிப் பணிப்பாளர் (இரத்தினவியல்)	MM 1-1	1	0	1
உதவிப் பணிப்பாளர் (தங்காபரணம்)	MM 1-1	1	1	0
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	AR-1	15	3	12
போதனாசிரியர்	AR-1	4	0	4
நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் (ஒருங்கிணைப்பு மற்றும் விருத்தி)	JM-1-1	1	1	0
நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் (பரீட்சை மற்றும் தொகை மதிப்பு)	JM-1-1	1	1	0
உள்ளகக் கணக்காய்வு	JM-1-1	1	1	0
முதுநிலை பயிற்சி உத்தியோகத்தர்	JM-1-1	6	0	6
வரை படக் கலைஞர்	MA-2-2	2	0	2
ஜீ ஐ எஸ் உதவியாளர்	MA-2-2	1	1	0
தொகுதி உதவியாளர்	MA-2-2	1	1	0
ஆராய்ச்சி உதவியாளர்	MA-2-2	11	0	11
தொழில்நுட்ப உதவியாளர்	MA-2-2	10	1	9
பயிற்சி உத்தியோகத்தர்	MA-2-2	23	13	10
கணக்காய்வு உதவியாளர்	MA-1-2	1	1	0
முகாமைத்துவ உதவியாளர்	MA-1-2	22	15	7
நிலத் துளையிடுகை இயந்திர இயக்குநர்	PL-3	2	0	2
சாரதி	PL-3	6	5	1
நிலத் துளையிடுகை இயந்திர இயக்குனர் உதவியாளர்	PL-2	2	0	2
திடல் மற்றும் ஆய்வு கூட உதவியாளர்	PL-1	16	12	4
		136	60	76

நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான ஊழியர் பங்கேற்பு - 2024

உள் நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

#	பயிற்சி நிலையம்	பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பங்கேற்பாளர்கள்
1	திறன் விருத்தி நிதியம் (SDFL)	அரசின் பெருகை செயன் முறை தொடர்பான சான்றிதழ் பாட நெறி (10 நாட்கள்)	திரு அசோக ராஜரத்ன முகாமைத்துவ உதவியாளர்
2		ஒழுக்க நெறி முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பத்திர பாட நெறி	திருமதி சமிதி விதானகே முகாமைத்துவ உதவியாளர் செல்வி நர்மதா விஜேரத்ன கணக்காய்வு உதவியாளர்
3		Secretarial Practices	செல்வி பானு ஹேமசந்திர முகாமைத்துவ உதவியாளர்
4		Occupational Health & Safety for better work life environment	திரு ருவிந்திர சந்திரகாந்த பயிற்சி உத்தியோகத்தர் திரு சிந்தக திசாநாயக்க பயிற்சி உத்தியோகத்தர் திருமதி டீ. டப்ளியூ. சித்திராங்கனி பயிற்சி உத்தியோகத்தர்
5		வருடாந்த நிலையான சொத்துகள், கையிருப்பு ஆய்வு மற்றும் வெளியேற்றுகை	நிறுவனத்தின் பணிக் குழுவுக்கு
6	Prag Institute	Vehicle Fleet Management	திருமதி கல்பனீ பெரேரா முகாமைத்துவ உதவியாளர்
7		Public procurement procedure	திருமதி கல்பனீ பெரேரா முகாமைத்துவ உதவியாளர்
8		Payment & expenditure procedure	திருமதி பபசரா குலதுங்க முகாமைத்துவ உதவியாளர்
9		வரிச் சட்டம் மற்றும் வரி கணிப்பீடு	திருமதி தம்மி ரூபசிங்க முகாமைத்துவ உதவியாளர்
10		Financial Statement 2024	திருமதி தம்மி ரூபசிங்க முகாமைத்துவ உதவியாளர்
11	International Language Center	Tamil Basic Course	திரு சஜித் முஹந்திரம் பிரதிப் பணிப்பாளர் (நிதி)
12	Export Development Board	Awareness programme for gems & jewellery sector SMEs on promoting online presence at EDB E-market place and export procedure	திருமதி நுவந்தி விஜேசிங்க - உதவிப் பணிப்பாளர் (நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விடயப் பரப்பு விருத்தி)
13	Sri Lanka Accreditation Board	Development of Laboratory Quality Management Systems as per ISO/IEC 17025:2017	திருமதி நுவந்தி விஜேசிங்க - உதவிப் பணிப்பாளர் (நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விடயப் பரப்பு விருத்தி) திருமதி நதீகா மந்திரீரத்ன ஆராய்ச்சி உத்தியோகத்தர்
14	E –Minds academy (pvt)Ltd.	Digital Marketing Certificate & Diploma	திரு எஸ். சுதர்ஷன் தொகுதி உதவியாளர்

DEBT
Savings

நிதி பிரிவு

69.928
63.772
44.870
48.991
20.556
31.012
26.417
12.002
11.311

8.0 நிதிப் பிரிவு

8.1 கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட கடந்த 05 வருட காலப் பகுதி தொடர்பான நிதித் தகவல்கள்

(ரூபா.000)

	2020	2021	2022	2023	2024
முன்னெடுப்பு வருமானங்கள்					
திறைசேரி கையளிப்பு மீண்டு வரும்	77,973.00	77,060.00	86,996.00	89119.00	94,992.00
பிற பங்களிப்புகள்	29,536.91	22,528.16	19,430.60	27,749.08	27,260.07
பாட நெறிக் கட்டணங்கள்	12,409.64	3,542.50	15,529.05	30,820.87	38,194.05
சேவைக் கட்டண வருமானம்	72.5	12.00	246.00	216.00	112.00
புவிச் சரிதவியல் ஆராய்ச்சி சேவைகளின் மூலமான பெறுகைகள்					
மொத்த முன்னெடுப்பு வருமானம்	**119,992.05**	**103,142.66**	**122,201.65**	**147,904.95**	**160,558.12**
பிற வருமானங்கள்	1,042.83	837.49	1,742.04	3,840.62	1920.98
வட்டி வருமானம்	457.21	293.71	466.03	632.09	470.42
பிற பெறுகைகள்	4680.0	1564.0			
மொத்த வருமானம்	**126,172.10**	**105,837.39**	**124,409.73**	**152,377.66**	**162,949.53**
கழிக்கப்பட்டது - செலவுகள்					
ஏ ஊழியர் மற்றும் நிர்வாக செலவுகள்	91,624.36	84,691.33	99,431.65	106,582.99	119,241.81
பீ தேய்மானம் மற்றும் பொதுச் செலவுகள்	28,208.10	33,251.66	30,297.86	39,997.83	38,788.19
மொத்தச் செலவுகள்	**119,832.46**	**117,943.00**	**129,729.51**	**146,580.82**	**158,030.00**
மேலதிகம் (குறைவு)	**6,339.64**	**(12,105.1)**	**(5,319.78)**	**5,796.84**	**4,919.53**

8.2 இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவுக் கூற்று

விபரம்	2024		2023	
	ரூபா'000	ரூபா'000	ரூபா'000	ரூபா'000
முன்னெடுப்பு வருமானம்				
மீண்டு வரும் கையளிப்பு - திறைசேரி		94,992.00		89,119.00
பிற வருமானங்கள்				
பாட நெறிக் கட்டணங்கள்		38,194.05		30,820.87
கெவுட வெப்ப மெருகூட்டல் கட்டணம்		112.0		216.0
வட்டி வருமானம்		470.42		632.09
நானாவித வருமானங்கள்		1,920.98		3,840.62
13 வருட தொடர் கல்வி நிகழ்ச்சி				
முன்னெடுப்பு வருமான மொத்தம்		**135,689.45**		**124,628.58**
குறைக்கப்பட்டது : முன்னெடுப்பு செலவுகள்				
பணிக் குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்		66,135.42		56,341.84
பயணச் செலவு		230.45		127.19
வழங்குகை மற்றும் நுகர்வுப் பொருட்கள்		5,770.09		4,751.28
பராமரிப்புச் செலவு		7,171.78		5,641.31
ஒப்பந்தச் சேவைகள்		32,152.51		32,452.49
பயிற்சிச் செலவு		5,243.84		4,745.96
பிற முன்னெடுப்புச் செலவுகள்		2,488.14		2,482.42
முன்னெடுப்புச் செலவுகளின் கூட்டுத் தொகை		**119,192.26**		**106,542.49**
முன்னெடுப்புகளின் மூலம் பெறப்பட்ட மேலதிகம் / (குறைவு)		**16,497.19**		**18,086.09**
குறைக்கப்பட்டது - நிதிச் செலவு		(49.55)		(40.50)
மூலதனச் செலவு தொடர்பான நிதியங்கள்	16,712.55		15,201.14	
பிற பெறுகைகள்				
	16,712.55		15,201.14	
குறைக்கப்பட்டது - தேய்மான நீக்கல் செலவுகள்	(28,240.66)	(11,528.11)	(27,449.88)	(12,248.74)
பிற மூலதன முதலீட்டு நிதியங்கள்	(10,547.52)		(12,547.94)	
குறைக்கப்பட்டது - மூலதன முதலீட்டு செலவு	(10,547.52)		(12,547.94)	
மூலதனச் சொத்துக்களை அதிகரித்தல்				
பிற மூலதன முதலீடுகளின் நிகர செலவு		4,919.53		5,796.84
முன்னெடுப்புகளற்ற வருமானம்				
ஒன்று சேர் - சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட வருமானம்				
அதி விசேட வகுதிகளுக்கு முன்		4,919.53		5,796.84
மேலதிகம் / (குறைவு)				
அதி விசேட வகுதிகள்				
காலப் பகுதிக்கான நிகர மேலதிகம் / குறைவு		4,919.53		5,796.84
ஒன்று சேர்க்கப்பட்டது				
முன்னைய ஆண்டுக்கான நிகர மேலதிகம் / (குறைப்பாடு)	(43,741.82)		(47,558.85)	
கழிக்கப்பட்டது - முன்னைய வருடத்தின் ஒப்பீடுகள்		4,269.15		(1,979.82)
நிகர மேலதிகம் / (குறைவு)		**(34,553.14)**		**(43,741.82)**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
2024 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான மீதி ஆவணம்

	2024		2023	
விபரம்	ரூபா'000	ரூபா'000	ரூபா'000	ரூபா'000
நடைமுறையற்ற சொத்துக்கள்				
சொத்து இயந்திரங்கள் உபகரணங்கள்	90,132.0		99,630.0	
பணி நன்கொடை நிதியம்	4,399.0	94,531.0	3,407.0	103,037.0
நிலையான வைப்புக் கணக்கு		5274		4846
நடைமுறை சொத்துக்கள்				
கையிருப்புகள் மற்றும் நுகர்வுப் பண்டங்கள்	8809		7355	
விற்பனைக்கென காணப்படுகின்ற புத்தகங்கள்				
கடன் மற்றும் முற் பணம்	7563		5538	
வைப்புகள்	850		1334	
வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய கணக்குகள்	12693		8718	
ஏழ்மையைப் போக்கும் கருத்திட்டம்				
முன் செலுத்துகைகள்	266		169	
பணம் மற்றும் வங்கி	24,418	54,599	20,044	43,158
சொத்துக்களின் மொத்தம்		154,404		151,041
பொறுப்புகள்				
நடைமுறை பொறுப்புகள்				
செலுத்த வேண்டிய கணக்குகள்	882		5712	
திரட்டு செலவுகள்	9989	10,871	3386	9099
நடைமுறையற்ற சொத்துக்கள்				
மினிமாட்டா கருத்திட்டம்	780		780	
பணி நன்கொடை தொடர்பான ஒதுக்கீடு	18,597		14941	
தேசிய விஞ்ஞான மன்றம்		19377		15721
பொறுப்புகளது கூட்டுத் தொகை				24820
நிகர சொத்துக்களின் கூட்டுத் தொகை		**124,156**		**126,221**
நிகர சொத்துக்கள் / பெருந் திரழ்கள்				
பங்கேற்பு மூலதனம்	50,000		50,000	
உள்ளடக்கம்	44,646		44,646	
பிற பங்களிப்புகள்	850		850	
ஊழியர் மறைமுக நிதியம்	2458		2,109	
மாறுபடக் கூடிய வருமானம் - மூலதன நிதியங்கள்	60755		72,358	
முழு மொத்த நிதியம்	(34,553)		(43,742)	
நிகர சொத்துக்களின் மொத்தம்		**124,156**		**126,221**

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருட காலப் பகுதிக்கான
நிதியோட்டக் கூற்று

(ரூபா'000)

விபரம்	2024	2023
முன்னெடுப்பு செயற்பாடுகளின் ஊடான நிதியோட்டம்		
முன்னெடுப்பு செயற்பாடுகளின் ஊடாக பெறப்பட்ட மேலதிகம் / குறைவு	**4,919.53**	**5,796.84**
பணமற்ற கொடுக்கல் வாங்கல்கள்		
தேய்மான ஒதுக்கீடு	28,240.66	27,449.88
வட்டி	(470.42)	(632.09)
இயந்திரங்கள், உபகரணங்கள், பழுதுபார்ப்பு ஒப்பீடு	(198.24)	
தழும்பல் நிலை மூலதன வருமான ஒப்பீடு	(27,260.07)	(27,749.08)
ஏனைய நடைமுறை பொறுப்புகளின் அதிகரிப்பு / குறைவு	1,772.88	4,158.93
காலங் கடந்த வாடகை	473.48	473.48
பணி நன்கொடை ஒதுக்கீடு	5,049.57	1,692.39
பணி நன்கொடை செலுத்துகை	(1,392.65)	(102.15)
ஏனைய நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பு	(60.25)	(7,074.80)
முன்னெடுப்புச் செயற்பாடுகளின் ஊடான நிகர பணவோட்டம் (அ)	**11,074.49**	**4,013.4**
முதலீட்டுச் செயற்பாடுகளின் ஊடான நிதியோட்டம்		
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(3,914.57)	(6,225.52)
பணி நன்கொடை நிதியத்தின் அதிகரிப்பு	(2,400.00)	(2,451.62)
வட்டி வருமானம்	820.24	883.29
நிலையான வைப்புகளின் அதிகரிப்பு	(427.74)	(542.37)
கடன் மற்றும் முற் பணக் கொடுப்பனவு	(4,953.33)	
கடன் மற்றும் முற் பண பெறுகைகள்	2,871.72	
பணி நன்கொடை நிதியத்தின் குறைவு	1,304.94	
முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலமான நிகர நிதியோட்டம் (ஆ)	**(6,698.74)**	**(8,336.2)**
நிதிச் செயற்பாடுகளின் மூலமான நிதியோட்டம்		
மூலதனக் கையளிப்பு		14,651.0
மினிமாட்டா கருத்திட்டம்		601.25
நிதிச் செயற்பாடுகளின் ஊடாக பெறப்பட்ட நிகர நிதியோட்டம் (இ)		**15,252.25**
பணம் மற்றும் நிதி வகுதிகளின் நிகர அதிகரிப்பு / குறைவு (அ) (ஆ) (இ)	4,375.75	10,929.43
ஆரம்ப பணத் தொகை / நிதி மீதி	20,043.12	9,113.68
வருட இறுதியில் இருந்த படியான பணம் / நிதி மீதி	**24,418.87**	**20,043.11**

தலைவர்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2024 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பான 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (“நிறுவனம்”) 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கம் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பு சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை எதிர்வரும் காலப் பகுதியில் பாராளுமன்றத்துக்கு முன் வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தொடர்பான பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2024 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த படியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியன இலங்கை பொதுத் துறையின் கணக்கீட்டுத் தராதரங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலையை வெளிக் காட்டுவதாக நான் கருதுகின்றேன்.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நடைமுறையற்ற பொறுப்புகளாக குறிக்கப்பட வேண்டிய ரூபா 2,458,479 ஆன ஊழியர் கடன் மறைமுக நிதியத்தின் மீதி, ரூபா 850,310 ஆன ஏனைய பங்களிப்புகள் மற்றும் ரூபா 60,754,680 ஆன தாமத வருமான மீதி ஆகியன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 01

இனது 95 ஆவது பந்திக்கு முரணாக, நிதி நிலைமைக் கூற்றில் நிகர சொத்துக்கள் / உரிமம் ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய காலப் பகுதியினது பிழைகளை சரி செய்யும் செயன் முறையின் போது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் தராதர இலக்கம் 03 இனது 47 ஆவது பந்தியின் பிரகாரம் பிழை ஏற்பட்ட காலப் பகுதி தொடர்பாக ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்களை மீளவும் முன் வைக்க வேண்டியிருப்பினும், நிறுவனத்தினால் மொத்தமாக ரூபா 6,157,875 ஆன மேற்குறித்த காலப் பகுதிக்கு உரித்தான 13 பிழைகளை சரி செய்கையில் ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்கள் மீளவும் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 07 இனது 92 ஆவது பந்தியின் பிரகாரம், முற்று முழுதாக தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், மேலும் பயன்பாட்டிலுள்ள கிரயம் ரூபா 72,606,768 ஆன சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களினது அண்ணளவான கொள் திறன் பெறுமானம் நிதிக் கூற்றுக்களில் வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 10 இனது 20 ஆவது பந்தியின் பிரகாரம், நிறைவு நிலையை கருத்திலெடுத்த வண்ணம் அதி அறவீடு மற்றும் தொடர்புடைய செலவுகளை அடையாளம் காண வேண்டியிருப்பினும், நிறுவனத்தினால் பயிற்சிப் பாட நெறி வருமானத்தை அடையாளம் காண்கையில், அதனடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுக்காது பாட நெறி வருமானம் அடையாளம் காணப்பட்டமையால் கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் வருமானம் ரூபா 5,154,360 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. மேலும் தராதரத்தின் 39 (அ) பந்தியின் பிரகாரம், வருமானத்தை அடையாளம் காணும் பொருட்டான கொள்கை வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை. பாட நெறிகளின் வாயிலான பெறுகைகளின் வாயிலாக ரூபா 7,232,524 ஆன தொகை 2025 வருட கால கட்டம் தொடர்பாக கிடைக்கப் பெற்றிருப்பினும் அது முன்பு கிடைக்கப் பெற்ற வருமானமாக அடையாளம் கண்டு கணக்கீடப்படாமையால் மேலதிகத்தை சம அளவில் மிகுதியாகவும், நடைமுறை பொறுப்புகள் குறைவாகவும் குறிக்கப்பட்டிருந்தன. 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியுடன் தொடர்புடையதாக ரூபா 7,281,724 ஆன கிடைக்க வேண்டிய பாட நெறி வருமானம் ரூபா 5,046,250 ஆக, ரூபா 2,235,474 ஆன தொகையினால் குறைவாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட்டமையால் நடைமுறை சொத்துக்கள் மற்றும் மேலதிகம் அளவியல் ரீதியாக குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சினால் கிடைக்கப் பெற்ற ரூபா 15,657,141 ஆன மூலதனம், குறிப்பாக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 11 இன் பிரகாரம், வருட கால கட்டத்தில் கொடுக்கல் வாங்கல்களின் வாயிலாக பெறப்பட்ட வருமானமாகக் கருதாது தழும்பல் வருமானமாக படிப்படியாக குறைக்கப்பட்ட பெறுமானத்திற்குரிய உரிமமாக குறிக்கப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டுத் தராதர இலக்கம் 19 இனது 76 ஆவது பந்தியின் பிரகாரம், ரூபா 18,597,495 ஆன பணி நன்கொடை ஒதுக்கீடுகளுடன் தொடர்புடைய பிந்திய சேவை பலன் முறி பொறுப்பு மற்றும் தொடர்புடைய விஸ்தீரணப்படுத்துகை சேவை கிரயத்தின் நடப்புப் பெறுமானத்தை கணக்குகளில் குறித்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை எனும் நிறுவனத்துடன் கூட்டிணைந்து செயற்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்றினது செலவு, அதிகார சபையினால் மீள் அறவிடப்படுவதுடன், ஆண்டு காலப் பகுதியில் ஏற்கப்பட்ட ரூபா 4,937,034 ஆன செலவுகள் தொடர்பாக கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் அதிகார சபையிடமிருந்து ரூபா 2,543,628 ஆன தொகை மீள் அறவிடப்பட்டிருந்தது. இதனுடன் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கை வெளிக் காட்டப்படாதிருந்ததுடன், கருத்திட்டத்துடன் தொடர்புடைய செலவுகள் மற்றும் கிடைக்கக் கூடிய கையளிப்புகள் நிர்வாக கணக்கொன்றின் ஊடாக கணக்குகளில் பதியப்பட்டு வருட கால கட்டத்தின் இறுதியில் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 2,015,285 என குறிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நிறுவனத்தின் மூலதன தலைமை கணக்கு வைப்புக் கொள்கையின் பிரகாரம் மூலதன கையளிப்புடன் தொடர்புடைய நிலையான சொத்து மீதியின் அளவுக்கு நிகரான செயன் முறை பெறுமானம் நிதி செயலாற்றுகை கூற்றினுள் அடையாளம் காணப்பட வேண்டியிருப்பினும், அதனடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாது படிப்படியான தேய்மானமாக ரூபா 16,712,556 ஆன மூலதன கையளிப்பு மீதி குறைக்கப்பட்டு, ரூபா 60,754,680 ஆன காலந் தாழ்ந்த வருமானமாக உரிமைகளின் கீழ் குறிக்கப்பட்டிருந்தது. மேலும், காலந் தாழ்ந்த வருமானங்களின் கீழ் குறைக்கப்பட்டிருந்த படிப்படியான தேய்மானப் பெறுமதி ரூபா 16,712,556 ஆகக் காணப்பட்டாலும், வருட கால கட்டத்தின் தேய்மான ஒதுக்கீடு ரூபா 28,240,553 ஆனமையால், ரூபா 11,527,997 ஆன வேறுபாடு நிலவியது.

(ஐ) கலந்தாலோசிப்பு வருட காலத்திலும், முன்னையை ஆண்டு கால கட்டத்திலும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,944,779 செலவுத் தொகையான அலுவலக தளபாடங்களின் தேய்மானம் ரூபா 1,258,695 ஆன தொகையில் அதிகளவில் கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. நிலையான சொத்துத் தேய்மானத்தை கணிப்பிடுகையில் ஒவ்வொரு சொத்து வகுதிகள் தொடர்பாகவும் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட திகதி மற்றும் பெறுமதியின் அடிப்படையில் அதனை முன்னெடுக்க வேண்டியிருப்பினும், அதற்குப் பதிலாக சொத்து வகுதி தொடர்பாக தேய்மானம் கணிப்பிடப்பட்டு கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் தேய்மானமாக ரூபா 28,240,553 ஆன தொகை கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(ஒ) கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் இறுதியளவில் அருவச் சொத்துக்கள் முற்று முழுதாகத் தேய்மானமடைந்திருப்பினும், அதன் பெறுமதியாக ரூபா 3,908,630 ஆன தொகை நிதிக் கூற்றுக்களில் குறிக்கப்பட்டிருந்தமையால், அப் பெறுமானத்தின் கீழ் சொத்துக்கள் அதிகளவில் பதியப்பட்டிருந்தன.

(ஓ) 2022 இலிருந்து 2024 ஆம் ஆண்டு காலப் பகுதி வரையான கால கட்டத்தில் நடைமுறை கணக்குக்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,714,164 ஆன பாட நெறிக் கட்ட வருமானம் அடையாளம் காணப்பட்டு கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. கிடைக்க வேண்டிய பாட நெறிக் கட்டணங்களில் 2021 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 754,000 ஆன மீதி உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நடை முறை சொத்துத் தேய்மானம் அப் பெறுமானத்தினால் அதிகளவில் பதியப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இல.கண.நிய) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்கள் போதியளவாகவும், பொருந்தக் கூடிய அடிப்படையிலும் காணப்படுவதாக நான் நம்புகின்றேன்.

1.3 நிறுவனத்தின் 2024 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன் என்னால் பெறப்பட்ட அவதானிப்புகள் நிறுவனத்தின் 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கருத்துறைகள் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள் மற்றும் ஏனைய தகவல்கள் எனும் வகுதியின் கீழ் எடுத்துறைக்கப்பட்டுள்ளது. இவ் ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன், அது தொடர்பாக நான் எவ்விதத்திலும் சான்றுபடுத்துகையோ அல்லது முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்தையோ தெரிவிக்க மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்புடையதான எனது பொறுப்பாக மேற்குறித்த அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அத்தகைய அடிப்படையில் செயற்படுகையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது பிரிதொரு விதமாக பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்தாதிருக்கின்றதா என்பதைக் கருத்திலெடுப்பதாகவுள்ளது.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன் என்னால் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும், என்னால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையிலும், இவ் ஏனைய தகவல்கள் அளவீட்டு ரீதியாக பிழையாகக் குறிப்பிடப்பட்டிருப்பதாக நான் கருதுவதாயின் அவ் விடயங்கள் என்னால் அறிக்கையிடப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இது தொடர்பாக அறிக்கையிடுவதற்கு எனக்கு எவ் விடயமும் காணப்படுவதில்லை.

1.4 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும், அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன் முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவன் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பெரும்பாண்மையான பிறழ் கூற்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக் கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித் தனியாகவோ அல்லது கூட்டாக ஒட்டு மொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக் கூடுமென நியாயமாக எதிர்ப்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் திரிபுகளை நான் மேற்கொண்டு உயர் தொழில் ஐயப்பாட்டினை பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங் கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர் கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல், மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத் தனம், வேண்டுமென்று விட்டி விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றைக் கண்டிபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது, தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற் திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக் கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்துக்குக் காணப்படுகின்ற ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாடிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்க்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட கணக்காய்வு கண்டறிவுகள், பிரதான உள்ளக நிர்வாக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்பினரை அறிவூட்டுகின்றேன்.

2. **ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு தேவைகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட நிதியங்கள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் எனும் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் கீழான தாக்கங்களைத் தவிர்த்து, 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களும், விளக்கப்படுத்துகைகளும் என்னால் பெறப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட வகையில் நிதி அறிக்கைகளை நிறுவனம் பேணிப் பராமரித்திருந்தது.

2.1.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் பொருந்தக் கூடியதாகவுள்ளன.

2.1.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iv) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கடந்த வருடம் என்னால் முன் வைக்கப்பட்ட முன் மொழிவுகள், முன் வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன் முறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சியங்களின் பிரகாரமும், போதியளவான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்டமையாலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன் வைப்பதற்குப் போதியளவான விடயங்கள் எனது கண்காணிப்பிற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நிறுவனத்தின் நிர்வாக சபையின் ஏதாவதொரு அங்கத்தவருக்கு நிறுவனத்துடன் தொடர்புபட்ட ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் சாதாரண வர்த்தக நிலைகளுக்குப் புறம்பாக தொடர்புபட்டிருப்பதாக.

2.2.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர ஏதாவதொரு தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளின் பிரகாரத்துக்கு ஏற்புடையதாகாத வண்ணம் செயற்பட்டிருப்பதாக.

சட்ட திட்டங்கள் / ஆணைகள் தொடர்பான விதிப்பாடு	இசைவாகாமை

2022 டிசம்பர் மாதம் 14 ஆந் திகதிய இலக்கம் 2310/29 ஐ உடைய அரசின் அதி விசேட வர்த்தமானியின் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அரச சேவைகள் ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்கு விதி 01 ஆவது பிரிவின் 139 ஆவது வகுதி	பதில் கடமையாற்றும் நியமனம் ஒரு வருட காலப் பகுதிக்கு மட்டுப்படுத்த வேண்டியிருப்பினும், பணிப்பாளர் நாயகம் பதவி மற்றும் பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவி தொடர்பாக பதில் கடமையாற்றும் நியமனம் கையளித்து 2024 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் முறையே 2 வருட காலப் பகுதியும், 3 வருட காலப் பகுதியும் கடந்திருப்பினும், அப் பதவிகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர்த்து நிறுவனத்தின் அதிகாரங்கள், நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளின் பிரகாரம் அமையாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக.

அதிகாரங்கள், செயற் பணிகள், பணிகள்	**இசைவாகாமை**
1993 இன் இலக்கம் 50 ஐ உடைய தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபை சட்டத்தின் 25 (1) ஊ பிரிவு மற்றும் 1995 ஜூலை 28 ஆந் திகதிய இலக்கம் 882 ஐ உடைய வர்த்தமானி அறிவிப்பின் (6) ஆவது பிரிவு	நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஐந்தைத் தாண்டாத வண்ணம் காணப்பட வேண்டியிருப்பினும், 2025 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 06 ஆகக் காணப்பட்டது. இதன் போது வர்த்தமானி அறிவிப்பின் கீழ் பெயரிடப்படாத கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் உதவிச் செயலாளரொருவர் பணிப்பாளரொருவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

2.2.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர்த்து நிறுவனத்தின் வளங்கள் மிகச் சிக்கனமாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் செயற் திறன் மிக்கதாகவும் குறித்த காலப் பகுதிகளில் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்புடையதாக பெறுகை மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படவிலையென.

இரத்தினக் கல் மற்றும் தங்காபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிக்கும் பொருட்டு ரூபா 14,204,402 ஆன தொகை செலவிடப்பட்டு 30 வருட கால குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட காணியில் கலந்தாலோசிப்பு வருட காலத்தில் இறுதியளவிலும் நிர்மாணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படாமையால் 08 வருட காலத்துக்கு மேற்பட்ட காலமாக செயல் வலுவற்ற நிலையில் நிலவியது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) அதிக கிராக்கியுள்ள விடயப் பரப்புகளை அடையாளம் கண்ட வண்ணம் அதனுடன் தொடர்புடைய 21 பயிற்சிப் பாட நெறிகளின் விடயப் பரப்புகள் விஸ்தீரணப்படுத்தி மேம்படுத்தப்பட்டிருப்பினும், வருட கால கட்டத்தில் மாணவர் சேர்ப்பு 14 பாட நெறிகள் தொடர்பாக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 7 பாட நெறிகள் தொடர்பாக எவ்வித விண்ணப்பதாரிகளையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கலந்தாலோசிப்பு வருட காலப் பகுதியில் இப் 14 பாட நெறிகள் தொடர்பாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முந்தைய வருட காலப் பகுதிக்கு நேரொத்ததாக 1577 இலிருந்து 1334 வரை நூற்றுக்கு 14 இனால் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த இரத்தினக் கல் வர்ண தரப்படுத்துகை மற்றும் விற்பனைப் பாட நெறி, இரத்தினக் கல் விலை மதிப்பீடு மற்றும் விற்பனை, தங்காபரண டிப்ளோமா ஆகிய பயிற்சிப் பாட நெறிகள் கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **பணிக் குழு முகாமைத்துவம்**

(i) 2024 டிசம்பர் 31 ஆந் திகதியிலிருந்த படியான நிறுவனத்திற்கென அனுமதிக்கப்பட்ட பணிக் குழுவான 136 இனில் 76, அதாவது அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு 56 ஆன பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. இதன் போது சிரேஷ்ட மட்டத்தையுடைய 22 உத்தியோகத்தர்கள், அதாவது அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நூற்றுக்கு 73 ஆன, மூன்றாம் நிலை 06 பதவிகள் அதாவது அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நூற்றுக்கு 67 ஆன மற்றும் இரண்டாம் நிலை 39 பதவிகள், அதாவது அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நூற்றுக்கு 55 ஆன எண்ணிக்கையில் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 12 பதவி வகுதிகளின் கீழான 33 பதவிகளில் பணிகளை முன்னெடுக்கும் முகமாக எந்தவொரு பணியாளும் காணப்படாத சந்தர்ப்பங்கள் நிலவியிருந்தன.

(ii) பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவி, 2011 ஜூன் மாதம் பணிக் குழு அனுமதிக்கப்பட்ட நாள் தொட்டு வெற்றிடமடைந்த நிலையில் நிலவியதுடன், ஆராய்ச்சிப் பணிகள் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட பணிக் குழுவின் கீழ் அனுமதிக்கப்பட்ட 19 சிரேஷ்ட பதவிகளில் 15 பதவிகள் வெற்றிடமடைந்த நிலையில் காணப்பட்டன. மேலும் ஆராய்ச்சிப் பணிகள் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட மொத்த பதவி எண்ணிக்கையான 50 இனில் 42 ஆன, அதாவது நூற்றுக்கு 84 ஆன பதவி வெற்றிடங்கள் காணப்பட்டமையானது நிறுவனத்தின் பிரதானமான பணித் துறையின் ஆராய்ச்சி செயன் முறைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் தங்கு தடை நிலையை தோற்றுவித்திருந்தது.

(iii) நிறுவனத்தின் பயிற்சிச் செயன் முறைகள் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் தொடர்பான 06 பதவிகள், விரிவுரையாளர் தொடர்பான 04 பதவிகள் மற்றும் பயிற்சி உத்தியோகத்தர் தொடர்பான 23 பதவிகளில், 10 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவதால் நிறுவனத்தின் பயிற்சிச் செயன் முறைகளை முன்னெடுக்கையில் எதிர் மறைவான ரீதியாக பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) பதவியை வகிக்கின்ற உத்தியோகத்தர் பதில் கடமையாற்றும் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருப்பதால் நிறுவனத்தின் பயிற்சிப் பணிகள் தொடர்பாக அவரது பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இரத்தினக் கல் மற்றும் தங்காபரணத் துறையின் தொழில்நுட்ப, நுட்பவியல் மற்றும் சந்தைப் பிரிவுகள் இன்றளவில் பெருமளவில் மாற்றத்துக்கு உள்ளாகியிருப்பதால் அதற்கு நேரொத்ததான கல்வித் தகைமைகளை உள்ளடக்கிய கல்வி சார் பணிக் குழு நிறுவனத்திடம் நிலவ வேண்டிய தேவை காணப்பட்ட போதிலும், பயிற்சிப் பிரிவில் பணியாற்றிய வண்ணமுள்ள அதிகளவானோர் சான்றிதழ் பாட நெறிகளை கற்றுள்ள சாதாரண நிபுணத்துவமுள்ள ஊழியர்களாகக் காணப்படுவதால் புதிய தொழில் முறைகள் மற்றும் நிபுணத்துவ உத்திகள் தொடர்பில் பயிலுநர்களை பயிற்றுவித்தல் சவால் மிக்க விடயமாகக் காணப்பட்டது.

(இ) 2017 - 2031 காலப் பகுதியில் விலை மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 300.65 மில்லியன் பணத் தொகை செலவிடப்பட்டு முன்னெடுப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற இலங்கையில் இரத்தினக் கல் நிதியங்களின் ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்கை கருத்திட்டத்தின் வாயிலாக 05 மாவட்டங்களிலுள்ள 50 பிரதேசச் செயலக பிரிவுகளில் இரத்தினக் கல் நிதியங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கைகள் மற்றும் வரை படங்களை வெளியிடுவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்ததுடன், கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் இறுதியில் ரூபா 30,589,687 ஆன தொகை செலவிடப்பட்டு 04 மாவட்டங்களில் அமைந்துள்ள 17 பிரதேசச் செயலக பிரிவுகள் ஆராயப்பட்டு 17 நிலப் பிரதேசங்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் வரைபடங்கள் வெளியிடப்பட்டிருந்தன. இக் கருத்திட்டத்தின் எதிர் வரும் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய இரத்தினக் கல் மற்றும் தங்காபரண அதிகார சபையுடன் சீரான இணக்கத்துக்கு வராமையால் தொடர்புடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 இலிருந்து 2021 வரையான காலப் பகுதியில் கருத்திட்டத்தின் வாயிலாக அடையாளம் காணப்பட்ட இரத்தினக் கல் தோற்றுவாய் இடங்களை ஏலத்தில் விடுவதன் வாயிலாக ஈட்டப்படுகின்ற பணத் தொகையான ரூபா 174.15 மில்லியன் நிதியம், 2022 இலிருந்து 2031 வரையான காலப் பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற ஆராய்ச்சிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களின் கீழான செலவுகளை ஏற்பதற்கு ஏற்புடையதென கூறப்பட்டிருப்பினும், ஆராய்ச்சிகளின் வாயிலாக அடையாளம் காணப்பட்ட இரத்தினக் கல் தோற்றுவாய் காணிகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஏலத்தில் விடப்பட்டு அதன் ஊடாக வருமானம் ஈட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரத்தினக் கல் எரிப்பு தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் ரூபா 10,977,344 ஆன தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மின் அடுப்பு இயந்திரம், கொள்வனவு செய்யப்பட்டு 06 வருட காலப் பகுதி பயன்படுத்தப்படாது செயல் வலுவிழந்து நிலவியதுடன், 2020 - 2021 காலப் பகுதியில் ரூபா 3,953,540 ஆன பணத் தொகை செலவிடப்பட்டு உதிரிப் பாகங்களும், மின் சுற்றுக்கள் பொருத்தப்பட்டும் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டிருந்தது. 2020 - 2021 காலப் பகுதியில் ஆராய்ச்சி தொடர்பாக 05 ஓட்டச் சுற்றுக்களை முன்னெடுப்பதற்கு மாத்திரம் குறித்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் இறுதியளவிலும் இயந்திரம் செயல் வலுவிழந்த நிலையில் காணப்பட்டது.

(உ) வர்த்தக மற்றும் பிற கிடைக்க வேண்டியவற்றின் மீதிகளின் கீழ் 2024 டிசம்பர் 31 ஆம் திகதியளவில், நிலவிய 02 வருட கால கட்டத்தைத் தாண்டிய ரூபா 3,122,1850 ஆன கிடைக்க வேண்டிய பாட நெறிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கலந்தாலோசிப்பு வருட கால கட்டத்தின் இறுதியில் ரூபா 2,458,479 ஆன மீதியுடன் கூடியதாக பராமரிக்கப்பட்டிருந்த ஊழியர் மறைமுகக் கடன் நிதியம் தொடர்பாக திறைசேரியின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

ஜீ. டப்ளியு. டீ. தர்மபால
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில் கடமையாற்றும்)